Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No S.T.C.NO.366/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | குமராசாமி | தொழில் | அர்ச்சகர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 09 day of october 2024.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**(எதிரிஆஜர்)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கோயில் அர்ச்சகராக உள்ளேன். நான் அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரியை எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். இவர்களை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 10, 12 வருடங்களாக தெரியும். நான் மற்றும் அழைப்பாணையில் சொல்லியுள்ள பதிவு எண் 569/2016 நாள் 22.09.2016 லட்சுமி சரஸ்வதி பைனான்ஸ் லிமிட் என்ற பெயரில் நானும், புகார்தாரர் வாசு எதிரி சத்தியநாதன் ஆகியோருடன் எத்தனை நபர்கள் இந்த பைனான்ஸ் நடத்தினோம் என்றால் மொத்தம் 9 நபர்கள் நடத்தினோம். நான், வாசு, சத்தியநாதன், ராஜா, அன்பு, டி.பி.எஸ்.ராஜா, சரவணன், பிரகாஷ் அவருடைய மனைவி பெயரிலும் நடத்தினோம். புகார்தாருக்கும் எதிரிக்கும் இதர பங்குதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டு அந்த பைனான்ஸ் மூடப்பட்டது என்றால் சரிதான்.

2. அந்த பைனான்ஸ் வேலூர் மாவட்ட பதிவு அலுவலகம் (நிர்வாகம்) பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். அதனை ஒவ்வொரு ஆண்டும் புதுபித்து வந்துள்ளோம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டபடும் வேலூர் மாவட்ட

பதிவளார் (நிர்வாகம்) அவர்கள் வழங்கிய சான்று நாங்கள் நடத்தி பைனான்ஸை பதிவு செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். 08.03.2023 வேலூர் மாவட்ட பதிவளார் (நிர்வாகம்) அவர்கள் வழங்கிய சான்று **எ.ம.த.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த பைனான்ஸ் எங்கு நடத்தப்பட்டது என்றால் திருப்பத்தூரில் உள்ள இஸ்மாயில் பேட்டையில் நடந்தது. பைனான்ஸில் புகார்தாரர் மற்றும் எதிரி பங்குதாரர்களிடையே ஏற்பட்ட பிரச்சனை பற்றி எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளாக பைனான்ஸ் நடத்தி மூடப்பட்டது என்றால் நான் பங்குதாரராக இருந்தது 3 வருடத்தில் முடிக்கப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் பார்த்து நடத்திக்கொண்டு வந்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கபடுகிறது.

Signature of Witness